Chundikuli Branch Library

24-9-1993

பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 119
இதழ்: 19

24—09—1993
விலை ரூபா 5-00

யாழ் மறைமாவட்ட
மேய்ப்புப் பணி மாநாடு
மாநாடு ஞாயிறு
03-10-1993
மறைக்கோட்ட
புதுப்புனல் வாரம்
யாழ்ப்பாணம் 4 — 8
மானிப்பாய் 11 — 15
ஒக்ரோபர்
பருத்தித்துறை 18 — 22
கிளிநொச்சி 25 — 30

யாழ் ஆயரான
இ. தோமஸ் சவுந்தரநாயகம்
ஆண்டகை
மறை வட்டத்தின் குருக்கள்,
துறவியர், பொதுநிலையினரான
இறைமக்களுக்கு விடுக்கும்
சுற்று மடல்
பக்கம் 3 பார்க்க

மேய்ப்புப் பணி மாநாட்டின் சித்திக்காக
செபம்
பக்கம் 4 பார்க்க

✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

# பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக நாம் செயற்பட வேண்டும்

★ யாழ். ஆயர்

**"தனிப்பட்ட முறையிலும் பொது அளவிலும் எம்மைப் புதுப்பித்துக் கொள்ளவும், மனமாற்றம் அடைந்து புதுவாழ்வு நடாத்தவும் இறைவன் எம்மை எப்போதும் அழைத்துக் கொண்டே இருக்கிறார். இதனால் காலத்திற்கேற்ற வகையில் வளரும் திருச்சபை மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுவதும், பணியின் வழிமுறைகளைச் சீரமைப்பதும் அவசியமாகிறது."**

யாழ் ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இறைமக்களுக்கு விடுத்த சுற்றுமடலில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் எதிர் வரும் பெப்ருவரி மாதம் இறுதியில் யாழ் மறைமாவட்டத்தின் ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் உள்ளடக்கிய ஒரு மேய்ப்புப்பணி மாநாட்டை நடத்தி, எமது தலத்திருச்சபைக்கு புத்தூக்கமும், ஆர்வமும் உண்டு பண்ணி, எம்மைச் சூழ்ந்திருக்கும் இன்னல்களுக்கும் நாம் முகம் கொடுக்கவும், எமது விசுவாசத்தை உறுதிப்படுத்தி பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக நாம் செயற்படவும் இறைமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் யாழ் ஆயர்.

(சுற்று மடலின் முழுமையான வாசகம் – 3 ஆம் பக்கத்தில் காண்க)

## இனங்களுக்கிடையிலான அமைதியை நிறுவுதலைத் தடுக்கும் சில வாதவழுக்கள்

★ வண. பிதா போல் காஸ்பேர்ஸ் S. J.

செப்ரெம்பர் 12 இல் வெளியான ''மெசன்ஞர்'' (*messenger*) எனும் கத்தோலிக்க ஆங்கில வாரப் பத்திரிகையில் ''*fallacies that delay inter–ethnic peace in our land*'' எனும் தலைப்பில் வண. பிதா போல் காஸ்பேர்ஸ் *S. J.* அடிகளாரால் எழுதப் பெற்ற கட்டுரையில் ஏழு (7) தப்பெண்ணங்களைக் குறிப்பிட்டு, ஒவ்வொன்றிற்கும் எதிராக பதிலை அளிக்கின்றார் அடிகளார் அவர்கள்.

**1. பயங்கரவாதம்**

'' கடந்த பல வருடங்களாக இலங்கையில் நடைபெறும் கிளர்ச்சிகளும், கலவரங்களும் ஓர் இனப்பிரச்சனை அல்ல. மாறாக இது ஒரு பயங்கர வாதப் பிரச்சனை! ''

பதில்: 'பயங்கரவாதம்' எனக் கூறி இப்பிரச்சனையின் மூல காரணங்களை ஆராய்வதற்கு இத்தப்பெண்ணம் தடையாயிருக்கிறது.

எனினும் முன்னாள் ஜனாதிபதி J.R ஜெயவர்த்தனா பிரதமராய் இருந்தபோது ஆகஸ்ட் 4,1977 இல் பாராளுமன்றத்தில் இனப்பிரச்சனையின் முக்கிய 4காரணங்களை— கல்வி, குடியேற்றம், மொழி, தொழில்—தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

### மறை ஆசிரியர் வெள்ளிவிழா

## ஒரு இலட்சியத்திற்கான அர்ப்பணவாழ்வு மகத்துவமிக்கது

'' ஒரு இலட்சியத்திற்காக கொள்கைக்காக உடல், உயிர், பொருள் அத்தனையும், வேதனை, துன்பம், சிரமங்கள், ஏற்றத் தாழ்வுகள் மத்தியில் அர்ப்பணிப்பவர்களின் வாழ்வு எத்துணை மகத்துவமிக்கது'' என்று பாராட்டினார் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் கடந்த 20–9–93 திங்கள் காலை, மறை ஆசிரியர்கள் திரு S.F சவுந்தரம், திரு C பங்கிராஸ் அவர்களின் மறைத்தொண்டின் 25 ஆண்டு நிறைவையொட்டி நிறைவேற்றப்பட்ட திருப்பலியில் மறையுரை ஆற்றிய யாழ் ஆயர்மேற்கண்டவாறு கூறினார். கிறிஸ்துவுக்காக, நற்செய்திக்காக உழைக்கும் பணியாளரின் அர்ப்பண வாழ்வு, இலட்சியவாழ்வு எதிர் கொள்ள வேண்டிய மேடுபள்ளங்கள் பலவற்றுள்ளே சிலுவை உண்டு, துன்ப துரிதங்கள் மத்தியில் பிரமாணிக்கமாயிருந்து, தன்னலமற்ற சேவைக்கு இறைவன் சன்மானம் அளிப்பார் எனும் தியாக சிந்தையோடு சிறப்பான பணியாற்றிய இவர்கள் இருவருக்கும் இவர்களின் குடும்பத்தினருக்கும் ஆயர் நன்றி தெரிவித்தார்.

திருப்பலியைத் தொடர்ந்து யாழ். மறைக்கல்வி இயக்குநர் அருள்திரு R.H. சகாயநாயகம் அடிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட பாராட்டு உரைகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### மேய்ப்புப்பணி மாநாட்டுச் செய்திகள்

## பங்குகளிலிருந்து....

**மானிப்பாய்:**

20க்கு மேற்பட்ட மறை ஆசிரியர்கள் தங்களை 10 குழுக்களாகப் பிரித்து, 10 துறைகளைப் பற்றிய கருத்துக்களைப் படித்து, ஆராய்ந்து, பலதரப்பட்ட பங்கு மக்களைச் சந்தித்து வினாக்கள் எழுப்பி மக்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றனர். ஆற்றலுள்ளோரை தத்தம் குழுக்களில் சேர்த்துக் கொள்ளுகின்றனர்.

பங்குத் தந்தையர்களின் வழிகாட்டலில், பல தடவைகளில் ஒன்று கூடி, கருத்துக்களைப் பரிமாறி பங்கிலுள்ள ஒவ்வொரு கோவில் மக்களையும் குழு குழுவாகச் சந்திக்கின்றனர்.

**யாழ் பேராலயம்:**

பல்வேறு பங்குச் சபைகளிலிருந்து 200க்கு மேற்பட்டோர் (துறவிகள் உட்பட), பங்குத் தந்தையின் பொது அழைப்பை ஏற்று ஒன்றுகூடினர். அவர்களுக்கு கருத்துரைகள் வழங்கியபின், அவர்களின் விருப்புக் கேற்ப 10குழுக்களை அமைத்து கலந்துரையாடல்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. பங்குத் தந்தையுடன் உதவிக் குருக்கள் முழுமூச்சுடன் செயல்படுவது புலனாகிறது.

**புனித அடைக்கல மாதா:**

பங்கு மக்கள் வதியும் மையங்களுக்கேற்ப மக்களை 10 பிரிவாக்கி, ஒவ்வொரு பிரிவும் ஒரு துறையைப் பொறுப்பெடுத்து, மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுச் சிறப்பாக வழி நடத்துவதற்கு பங்குத் தந்தை பொதுக் கூட்டமும் நடாத்தி, குழுக் கலந்துரையாடல்கள் மூலம், மக்களுக்கு உற்சாகம் அளித்து வருகிறார்.

## திருமலை-மட்டுநகர் மறைமாவட்டம் நூற்றாண்டு விழா

திருமலை, மட்டுநகர் மறைமாவட்டத்தின் நூற்றாண்டின் உச்சவிழா சென்ற மாதம் 28ஆம் 29ஆம் திகதிகளில் கொண்டாடப்பட்டது.

நூற்றாண்டுக்கான தொடக்க நாள் நிகழ்வுகள் 1993 தைத் திங்கள் 10ஆம்நாள் திருகோணமலை பரி, மரியாள் பேராலயத்தில் திருமலை—மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோ. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் ஆரம்பமாயின.

ஆகஸ்ட் 28ஆம் நாளில் உச்ச விழா நிகழ்வாக கலை நிகழ்ச்சிகள் கோலாகலமாக இடம்பெற்றன. 28ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு மட்டுநகர் திறந்த வெளியில் பெரும் மக்கள் வெள்ளத்தில் நடைபெறவிருந்த விழாத் திருப்பலி கொட்டும் மழை காரணமாக மூன்று பிரிவாக மட்டுநகர் பேராலயத்தில் திருமலை—மட்டுநகர் ஆயராலும்,மறைக்கல்வி நிலையத்தில் சிலாப ஆயராலும், திறந்த வெளியில் யாழ் ஆயராலும், நிறைவேற்றப்பட்டது.

## மதம் இரத்தத்தில் ஊறிப்போயுள்ளது

தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கைக்கு எதிரான போராட்டத்தில் கத்தோலிக்கத் திருச்சபை முக்கிய பங்காற்றியது என தன் பாராட்டுதல்களை வெளியிட்டார் கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலா.

கத்தோலிக்க ஆலயத் திருப்பலியில் பங்குபற்றி உரையாற்றிய A. N. C. கட்சித் தலைவர் மண்டேலா மதம் என்பது எங்களின் இரத்தத்தில் ஊறிப் போய் உள்ளது. கிறிஸ்தவத் திருச்சபை எங்கள் வாழ்வில் இன்றியமையாதது என்றார்.

மண்டேலா மெதடிஸ்த கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவராக இருப்பினும் திருப்பலியில் திரு நற்கருணை பெற்று உட்கொண்டார் என்று வத்திக்கான் வானொலி தெரிவித்தது.



குருத்துவ
வெள்ளி விழா
அருள்திரு
பிரான்சிஸ் டானியேல் O.M.I.
ஒக்ரோபர் 5
அருள்திரு
A. P. தேவசகாயம்
ஒக்ரோபர் 15
காவலன் நல்லாசிகள்

## எம் கருத்து

# ஒரு சர்வதேச உணர்வு

அண்மைக் காலத்தில் இடம் பெறும் நிகழ்வுகள் நம்முடைய கவனத்தை உலகில் நிலவும் இரண்டு நிலைகள்பால் ஈர்க்கின்றன. ஒன்று மனிதனின் உள்ளத்தில் இயற்கையாகவே எழும் சமாதான உணர்வு. மற்றொன்று உரிமைப் போராட்டங்களுக்குப் 'பயங்கரவாத'மெனப் பெயரிட்டு, சண்டையையும் குழப்பத்தையும் சுயநலத்திற்குப் பயன்படுத்தி அமைதியற்ற தன்மையை நீடிக்கும் சுயநலவாதிகளின் வெறுப்பு உணர்வு.

முதல் நிலையானது நம்பிக்கையை அளிக்கின்றது இரண்டாவதோ நம்பிக்கையைத் தகர்க்கின்றது. இயற்கையாகவே எழும் சமாதான உணர்வு உலக அமைதிக்குப் பாடுபடுவதுமட்டுமன்றி, அதன் வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவாகவும் உள்ளது. மாறாக, சுயநலவாதிகளின் வெறுப்பு உணர்வோ மனித உரிமை மீறல்களுக்கு வழிகோலுவதுடன் போர் முழக்கத்திற்கும், நிட்டூரச் செயல்களுக்கும், உயிர்க் கொலைகளுக்கும் இன அழிவிற்கும் மூலகாரணமாகிறது.

நமது உலக வரலாறு பல்வேறு சூழ்நிலைகளிலும் சந்தர்ப்பங்களிலும் எழும் சமாதான உணர்வை பல அரிய செயற்பாடுகளாலும், அமைப்புகளாலும், உடன்படிக்கைகளாலும் எண்பித்திருக்கின்றது. கடந்த வாரம் 13-9-93இல் கைச்சாத்திடப்பெற்று வரலாறு படைத்த இஸ்ராயேல் — பலஸ்தீன விடுதலை இயக்க ஒப்பந்தம் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது.

40 வருட பயங்கரமான போராட்டத்தின்பின், இவ் இருசாராரும் இன்று காட்டும் வழி நம் அனைவருக்கும் எடுத்துக்காட்டாகவும், தூண்டுகோலாகவும் அமையவேண்டும்; அரசியல்வாதிகளையும் சிந்தனையாளர்களையும் துணிவுடன் செயற்பட வைக்கவேண்டும்; சில மறுக்கமுடியாத உண்மைகளைச் சிந்திக்காது உணர்த்த வேண்டும்.

நல்ல மனமுதுள்ளோர் முன்நின்று உழைத்தால் உலகில் சமாதானம் நிலவும்; போரையும் குழப்பத்தையும் தவிர்த்து சமாதானம் இவ்வுலகில் ஏற்பட வாய்ப்பு உண்டு. இத்தகைய நல் மனத்தோரை உருவாக்கும் பொறுப்பு மத வழிகாட்டிகளுக்கும், கலைஞர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், சிந்தனையாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் சிறப்பாக பத்திரிகையாளருக்கும் உரியதே.

சமாதானம் திட்டமிட்ட அநாகரீக, நாசவேலைகளின் மூலம் கிடைப்பதில்லை. மாறாக கபடமும் கடினமும் இல்லாத நல் மனமுள்ளோர், மற்றவர்களின் உரிமைகளையும் அவரவருக்குரிய மாண்புமிக்க மதிப்பையும் வழங்கி, நீதியின் அடிப்படையில் உருவாகும் திட்டங்களைப் பொறுமையுடன் சீர்தூக்கி ஆராய்ந்து உரையாடி சமாதானத்திற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும்.

போருக்கு முக்கியத்துவம் கொடுத்த காலம் தேய்பிறையாகின்றது. போரை வெறுத்து சமாதானத்தை நாடுவது, தேடுவதே உத்தமமானது என்ற உணர்வு ஒரு சர்வதேச உணர்வாக மாறிவரும் இக்காலகட்டத்தில், ஒரு சிறு தீவில், சுயநலந்தேடும் ஒரு சில சுகபோகவாதிகளிடத்தில் இன்னும் ஏன் இவ் உன்னத உணர்வு உதயமாகவில்லை என்பது பெரும்பாலானோர்க்குப் புரியாத புதிரல்ல எனினும், சகல தரப்பினராலும் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய தொன்றாகும். கண்டிக்க வேண்டியவர்களின் மௌனம் அமைதியை அழிப்பவர்களை ஆதரிப்பதற்குச் சமமாகும்.

மாற்றுக் கருத்துடையவர்களைப் பூண்டோடு களைந்து அடக்கி ஆளவேண்டும் என்னும் தீய எண்ணத்தின் அடிப்படையில், பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்னும் இழிந்த நோக்கில், அனர்த்தங்களுக்கும் நாசவேலைகளுக்கும் திட்டமிடுவதற்குப் பதிலாக, எப்பொழுது உயர்ந்த பண்புகளான அன்பு, நீதி, உண்மையினால் உதித்த தூய சிந்தனைகள் பண்பட்ட மனங்களில் விதைக்கப்படுகின்றனவோ, அப்பொழுதுதான் சமாதானத்தின் வித்து இரத்தக் கறை செறிந்த இம் மண்ணில் முளைவிட்டுச் செழித்து வளரும்!

## திருமறை அறிவை வளர்ப்போம்

# கிறிஸ்தவ கோட்பாடு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

9. மீட்பளிக்கும் அருள் சாதனங்கள்.

1. மனிதரோடு, குறிப்பாக தமது சீடரோடு தாம் கொண்டுள்ள உறவைப்பற்றி விவரிக்கும்போது இயேசு தம்மை ஓர் ஆயனுக்கும், உயிருள்ள நீரூற்றுக்கும், வாழ்வுக்கும், ஊட்டமளிக்கும் அப்பத்துக்கும் ஒப்பிடுகிறார். அருள் என்னும் தெய்வீக கொடையை அளித்து அதற்கு அடையாளமாக விளங்கும் திருச்சடங்குகளின் மூலம், இயேசு திருச்சபையில் தமது உயிரூட்டும் மீட்பளிக்கும் செயலைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். இயேசு தாமே ஏற்படுத்திய இந்தப் புலனீடான அடையாளங்கள் இப்போது ஆயர்களாலும், அவர் உடனுழைப்பாளரான குருக்கள் திருத்தொண்டர்களாலும் நிறைவேற்றப் படுகின்றன.

கிறிஸ்தவ சொல்மரபில் இவை "அருள்சாதனங்கள்" என அழைக்கப்படுகின்றன. திருநிலைப்படுத்தப்பட்ட குருவின் மூலம் கிறிஸ்து தாமே இவ்வருட்சாதனங்கள் ஒவ்வொன்றிலும் செயலாற்றுகிறார். ஆகவே, அவை எப்போதும் நிறைபயன் அளிக்க வல்லன. ஆனால் அருட்சாதனங்களிலிருந்து பெறப்படும் ஆன்மீக நலன்கள், அவற்றைப் பெறுவோரின் விசுவாச நிலை, பணிவிணக்கம், உளத் தூய்மை ஆகியவற்றிலே தங்கியுள்ளன.

2. அருட்சாதனங்களிலே கிறிஸ்து மனிதனிடம் வந்து, அவனுக்கு மீட்பளிக்கும் விதத்தில் தம்மை அவனுக்கு வழங்குகிறார். இந்தச் சந்திப்பு மனித வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களை ஒத்ததாயிருக்கின்றது. மனிதன் கருவாகிப் பிறந்து இவ்வாழ்க்கையில் பிரவேசிக்கின்றான். இயேசு திருமுழுக்கின் மூலம் அவனை ஒரு புதிய வாழ்வில் பிறக்கச் செய்கின்றார். மனிதன் வளர்ந்து முதிர்ச்சி நிலை அடைகின்றான். உறுதிப்படுத்தலில் அவனுக்குப் புதிய வாழ்வின் நிறைவு அளிக்கப்படுகிறது. மனிதனது இயல் வாழ்க்கையில் அவனுக்கு ஊட்டம் தேவை. புதிய வாழ்வின் ஊட்டமானது தேவநற்கருணை என்னும் அருட்சாதனத்தில் கண்ணுக்குப் புலப்படக் கூடிய அடையாளங்களான அப்ப இரச வடிவில் மறைபொருளாகப் பிரசன்னமாயிருக்கும் ஆண்டவரின் மகிமைபெற்ற திருவுடலேயாகும். இயல் வாழ்க்கையில் உடலுக்கு ஏற்படும் நோய்கள், காயங்கள் உடலின் ஆரோக்கிய நிலையாலும் மருந்துகளாலும் குணப்படுத்தப் படாவிட்டால் அவற்றால் உயிராபத்து ஏற்படலாம். புதிய வாழ்வில் பச்சாத்தாபம், நோயில் பூசுதல் என்னும் அருட்சாதனங்கள் நன்கு குணப்படுத்தி வலுவூட்டுகின்றன. நோயில் பூசுதலின் போது கிறிஸ்து நோயாளியிடம் வந்து, பாவமாசுகளிலிருந்து அவனைத் தூய்மைப்படுத்தி, மரணத்தோடு அவன் போராடும் போது அவனைத் திடப்படுத்துகின்றார். குடும்பமும் சமூகமும் அதன் அங்கத்தவரது வாழ்வில் சமுதாயப் பண்புக் கூறுகளுக்கு உத்தரவாதம் அளிப்பதுபோன்று, குருத்துவமும் மெய்விவாகமும் புதிய வாழ்வின் சமுதாயப் பரிமாணங்களுக்கு உத்தரவாதம் அளிக்கின்றன. குருத்துவம் என்னும் அருட்சாதனமானது ஆயர்கள், குருக்களுக்கு வழங்கும் அதிகாரத்தின் மூலம் புதிய வாழ்வானது கிறிஸ்துவன் வழியாக, இறைமக்களிடையில் தொடர்ந்து பரப்பப் படுகிறது. குருத்துவநிலையானது அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும், அதிகாரவுரிமையுள்ள போதகராகவும் இருக்கின்றது. கிறிஸ்தவ விவாகத்தில் ஓர் ஆணும் பெண்ணும் பரஸ்பர அன்புக்காகவும் துணைக்காகவும் ஒன்று சேர்ந்து, இவ்வுலகில் இறைவனுடைய அன்புக்குத் தம்மை அர்ப்பணித்து. அவரது பணிக்காக புதிய உயிர்களை பிறப்பிக்கின்றனர்.

(வளரும்)

## அன்னை திரேசாவின் உள்ளத்தை உருக்கிய நிகழ்ச்சிகள்

**முதல் சம்பவம்**

ஒரு நாள் பசியால் வாடிய அனாதைக் குழந்தைக்கு சாப்பிடுவதற்கு ஒரு ரொட்டி கொடுத்தேன். அதை வாங்கிய குழந்தை வேகமாக சாப்பிடாமல் மெதுவாகச் சப்பிக்கொண்டிருந்தது. விரைவாக ஏன் சாப்பிடவில்லை என்று குழந்தையைக் கேட்டேன். இந்த ரொட்டியை வேகமாகச் சாப்பிட்டு விட்டால், மீண்டும் பசி வந்தால் என்ன செய்வது? ஆகையால் தான் மெதுவாகச் சப்புகிறேன் என்று குழந்தை கூறிற்று. எனவே, அனாதைக் குழந்தைகளுக்குச் சேவை செய்வதையே தலையாய சேவையாகக் கொண்டேன்.

**இரண்டாவது சம்பவம்**

அனாதைக் குழந்தைகளுக்குச் சேவை இல்லம் அமைத்து நடத்தி வருகையில் ஒரு சமயம் சர்க்கரைப் பஞ்சம் ஏற்பட்டது. குழந்தைகளுக்குச் சர்க்கரை இல்லையே என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு குழந்தை தன் பெற்றோருடன் வந்து கொஞ்சம் சர்க்கரையை என்னிடம் கொடுத்தது. ஏது இந்த சர்க்கரை என்று அந்தக் குழந்தையைக் கேட்டேன். சர்க்கரைப் பஞ்சமான இந்தக் காலத்தில் அனாதை குழந்தைகளுக்குச் சர்க்கரை இல்லாமல் கஷ்டப்படுவீர்களே என்று கருதி என் வீட்டில் எனக்குச் சாப்பிடக் கொடுத்த சர்க்கரையை மீதிப்படுத்தி உங்களிடம் கொண்டு வந்திருக்கிறேன் என்று குழந்தை கூறியது. குழந்தையின் கருணை உள்ளத்தைக் கண்டு என் உள்ளம் நெகிழ்ந்து விட்டது.

## சிந்திப்போம் - முன்வருவோம் - செயல்படுவோம்

**(புனித வின்சென்ற் டீ போல் - திருநாள் செப். 27)**

"சேவை செய்ய முன் வந்தவன் ஒரு போதும் பின்னால் திரும்பிப் பார்ப்பதில்லை, எப்போதும் அவன் கண்கள் முன்னால் நோக்கியபடியே இருக்கும். ஏனெனில் அவன் செய்து முடித்த சேவைகளை விட அவன் இன்னும் செய்ய வேண்டிய கருமங்கள் நிறைய உண்டு.

இது புனித வின்சென்ற் டீ போல் தரும சபையின் தாபகாரன பிரட்றிக் ஓசானத்தின் கூற்று. புனித வின்சென்ற் டீ போலின் நாளைக் கொண்டாடும் தினமான செப்ரம்பர் 27 அன்று இக் கூற்று எமக்கு நல்லதொரு செய்தியைத் தருகின்றது.

இந்தக் காலகட்டத்திலே பொதுநிலையினர் என்ற ரீதியில் நாம் செய்ய வேண்டிய கடமைகள் சேவைகள் தருமங்கள் பல உண்டு.

★ உடைந்த வீடுகளுக்குள் ஏங்கும் எம் அயலவர்கள் எத்தனை?

★ உண்ண உணவின்றி காய்ந்த வயிறுகளுடனும் வற்றின கண்களுடனும் வாடும் மக்கள் எத்தனை?

★ குணமடையாத நோய்களுடன் பராமரிப்போர் யாருமின்றி, தனிமையாலும், நோவினாலும், மனவருத்தத்தினாலும் முனகும் குரல்கள் தான் எத்தனை?

★ தொழிலின்றி ஊதியமின்றி பொருளாதார ஊனமுற்றோர் எத்தனை?

★ குடும்பங்களில் கணவன் - மனைவி— பிள்ளைகளுக்கிடையில் புரிந்துணர்வு இல்லாமல் நிலைகுலையும் குடும்பங்கள் எம்மத்தியில் எத்தனை?

இவர்கள் எல்லோரும் எமது உதவியை பல்வேறு வகையில் நாடி நிற்கின்றார்கள். இவர்களை எமது கண்கள் இனம் காண்கின்றனவா?

இவர்களின் ஏக்கப் பெருமூச்சுக்களை எமது காதுகள் பிரித்துணர்கின்றதா?

சிந்திப்போம் — முன்வருவோம் செயல்படுவோம்.

எஸ். லியோ எதிர் மன்னசிங்கி
உபதலைவர்
புனித வின்சென்ற் டீ போல்
இலங்கை தேசிய சபை,

## இறை இரக்கத்தினாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும்

யாழ். ஆயரான

# இ. தோமஸ் சவுந்தரநாயகம்

ஆண்டகை

எமது மறைவட்டத்தின் குருக்கள், துறவியர், பொதுநிலையினரான இறைமக்களுக்கு விடுக்கும்

# சுற்று மடல்

*கிறிஸ்து யேசுவில் அன்பான சகோதரர்களே,*

கி. பி. மூன்றாவது ஆயிரமாம் ஆண்டுகளின் உதயத்தை நோக்கி நிற்கும் திருச்சபையையும் அனைத்துலகினையும் நோக்கி, ''அனைத்துலக மக்களே, நமதாண்டவராகிய கிறிஸ்துவுக்குக் கதவைத் திறந்துவிடுங்கள்'' என்ற அறைகூவல் விடுத்துள்ளார் திருத்தந்தை அவர்கள். எம் மீட்பராகிய இயேசு அப்போஸ்தலர்கள் வழியாக அமைத்த மறைபரப்புப் பணியையும், தனிமனித புதுப்பித்தலையும் புத்துணர்வுடன் செயற்படுத்த நம் ஒவ்வொருவரையும் திருத்தந்தை அழைக்கிறார். இந்த அழைத்தலுக்குச் செவிமடுத்து அதனை நாடளாவிய முறையில் நெறிப்படுத்த இலங்கை ஆயர்கள் மன்றம் எதிர்வரும் 1994ஆம் ஆண்டு ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினரை உள்ளடக்கிய ஒரு தேசிய மேய்ப்புப்பணி மாநாட்டினைக் கூட்டி, இயேசு நமக்களித்த பணியை இலங்கைத் திருச்சபை தன் வாழ்வாலும், பணியாலும் நிறைவேற்ற உகந்த வழிவகைகளை ஆழ்ந்து சிந்தித்துத் திட்டமிட விழைகிறது.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நடைபெற்று 30 வருடங்கள் சென்று விட்டன. திருச்சபையைப் புதுப்பிக்கும் நெறிமுறைகளைப் பொதுச்சங்கம் ஆராய்ந்து வெளியிட்டதைத் தொடர்ந்து, 25வருடங்களின் முன்னர், இலங்கையின் தேசிய மறைப்பணிச் சங்கம் நடைபெற்றது. இப்போது இரண்டாவது நிகழ்வாக தேசிய மேய்ப்புப்பணி மாநாடு அடுத்த ஆண்டில் இடம்பெறவுள்ளது. உலகளாவிய முறையிலும், நம் நாட்டிலும் பல்வேறு மாற்றங்கள் கடந்த கால் நூற்றாண்டில் இடம்பெற்றுள்ளன. இம்மாற்றங்கள் எம் மறைவாழ்வில் பல சாவால்களைக் கொண்டுவந்துள்ளன. போராட்டங்களும், நாடுகளின் பிரிவினையும், அகதிகள் – இடம்பெயர்ந்தோர் பிரச்சனைகளும், ஒழுக்கச் சீர்குலைவுகளும், வறுமையும், மட்டுமீறிய தன்நலப்பற்றும் என்றிவ்வாறாக, விடைகாண்பதற்குச் சிக்கலான பல வினாக்கள் நம் முன் நிற்கின்றன. இவற்றுக்கெல்லாம் தீர்வுகாண வேண்டுமெனில், கிறிஸ்துவில் எமது விசுவாசத்தை ஆழப்படுத்தி எம்மையும் எமது பணிகளையும் மதிப்பீடு செய்து சீர்ப்படுத்துவது இன்றியமையாததாகும். இன்றைய சவால்களையும், நற்செய்திப் பணிக்கான வாய்ப்புக்களையும் சீர்தூக்கிப் பார்த்து, வரப்போகும் ஆண்டுகளில் திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் கைக்கொள்ளவேண்டிய திட்டங்களைத் தூயஆவியின் வழி நடத்துதலில் கண்டறிதலே இம் மாநாட்டின் நோக்கமாகும். எனவேதான் ''தன்னைப் புதுப்பித்து பகிரும் திருச்சபையை நோக்கி'' என்னும் கருத்தை மையப்பொருளாக எமது ஆயர்கள் தேர்ந்துள்ளார்கள்.

### தன்னைப் புதுப்பித்து பகிரும் திருச்சபை

தனிப்பட்ட முறையிலும் பொது அளவிலும் எம்மைப் புதுப்பித்துக் கொள்ளவும், மனமாற்றம் அடைந்து புது வாழ்வு நடத்தவும் இறைவன் எம்மை எப்போதும் அழைத்துக் கொண்டே இருக்கிறார். இதனால் காலத்துக்கேற்ற வகையில் வளரும் திருச்சபை மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுவதும், பணியின் வழிமுறைகளைச் சீரமைப்பதும் அவசியமாகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வழியில் நின்று இலங்கைத் திருச்சபை தன்னைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புகின்றது. இப்புதுப்பித்தல் மூன்று படிகளில் இடம்பெற வேண்டும். முதலாவது: ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துயேசுவை தனது ஆண்டவராகவும் மீட்பராகவும் பற்றிக்கொண்டு, ''இனி நான் அல்ல: கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்'' என்ற விசுவாச வாழ்வில் ஈடுபடுதல். இரண்டாவது: கிறிஸ்தவர்கள் தமது செப வாழ்விலும், வழிபாட்டிலும் நிறை விசுவாசத்துடன் பங்குகொள்ளுதல். மூன்றாவது: இறைவார்த்தையினாலும், அருள்சாதனங்களாலும் ஊட்டம் பெற்று தன்னலத்தை விடுத்து பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக மாறுவது. இவற்றுக்கெல்லாம் உறுதுணையாக இருப்பவர் இறைவனாம் தூய ஆவி என்பதை உணர்ந்து நேர்மையான உள்ளத்துடன் ஒத்துழைப்பது.

### மேய்ப்புப்பணி மாநாட்டின் செயற்பாடு

தேசிய மட்டத்தில் நடைபெறவிருக்கும் மாநாடுபற்றிய விபரங்களை உள்ளடக்கிய ஆயர்களின் சுற்றுமடலை இவ்வாண்டு பங்குனிமாதத்தில் பத்திரிகைகளில் பிரசுரித்தும், ஞாயிறு திருப்பலி வேளையில் எமது ஆலயங்களில் வாசித்து விளக்கியும் உள்ளோம். இம்மாநாட்டின் செயற்பாடுகளை முன்னெடுக்க குருக்கள், துறவியர், பொதுநிலையினரை உள்ளடக்கிய குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவர்கள் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

### யாழ். மறைமாவட்ட மாநாடு

பழம்பெருமை வாய்ந்த எமது மறை மாவட்டம் இப்போதைய போர் நடவடிக்கைகளினால் பல்வேறு முறைகளில் நலிவுற்று இருக்கிறது. இதனால் எமது மறைவாழ்வும் எவ்வளவோ தாக்கங்களுக்குள்ளாகியிருக்கிறது. இருப்பினும் எமது மறைமாவட்டத்தில் ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினரை உள்ளடக்கிய ஒரு மறைப்பணி மாநாட்டை நடத்தி எமது தலத்திருச்சபைக்கு புத்தூக்கமும், ஆர்வமும் உண்டு பண்ண விரும்புகிறோம். எம்மைச் சூழ்ந்திருக்கும் இன்னல்களுக்கு நாம் முகங் கொடுக்கவும், எமது விசுவாசத்தை உறுதிப்படுத்தி பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக நாம் செயற்படவும் வேண்டுமென ஆசிக்கிறோம்.

### மாநாட்டிற்கான முன்னாயத்தங்கள்

எதிர்வரும் ஆண்டில் மாசிமாத இறுதியில் எம்மறை மாவட்டத்தில் இம் மாநாட்டை நடத்தத் தீர்மானித்துள்ளோம். இதற்கான முன்னாயத்தங்களைச் செய்ய பத்து அம்சங்களின் அடிப்படையில் குழுக்கள் உருவாக்கப்பெற்று, அவை முதலில் வினாக் கொத்துக்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன. இக்குழுக்களுக்கான கருத்தரங்குகள் நடாத்தப்பெற்று வருகின்றன. எதிர்வரும் ஐப்பசி 3 ஆம் நாள் ஞாயிறு வாரம் மாநாட்டிற்கான ''எழுச்சி ஞாயிறு'' ஆக மறைவட்டத்தின் பங்குகள் தோறும் அனுட்டிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். அன்று புதுப்பித்தலை இலக்காகக் கொண்டு திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலி முடிவில் மாநாட்டைப்பற்றிய ஒரு வினாக்கொத்து மக்களுக்குக் கொடுக்கப்பட்டு பதில் பெறப்படும். மாநாட்டின் சித்திக்காக நாளாந்தம் சொல்ல வேண்டிய செபம் அன்று அறிமுகம் செய்யப்படும். இதனைத் தொடர்ந்து பத்து ஞாயிறு வாரங்கள் மாநாட்டுக் கருத்துக்கள் பரிமாறப்படும். முன்னாயத்தம் செய்யப்பட்டுள்ள குருக்கள், துறவியர், பொதுநிலையினரைக் கொண்ட குழுக்கள் ஒவ்வொரு பங்கையும் தரிசித்து, ''புதுப்புனல்'' என்ற பெயரில் விழிப்புணர்ச்சி வாரம் நடத்துவர்.

### இறை மக்களின் பங்களிப்பு

தனிமனித புதுப்பித்தலின் உயிரூட்டமுள்ள முயற்சிகள் குடும்பங்களிலும், தொடர்ந்து பங்கிலும் சீரிய விசுவாச மறுமலர்ச்சிக்கு இட்டுச்செல்லும் என்பதனைக் கருத்திற் கொண்டு தனியாகவும், குடும்பமாகவும், பங்குமட்டத்திலும் செபிக்கவேண்டியதன் அவசியத்தை நாம் அழுத்திக் கூற விரும்புகிறோம். இத்தகைய செபவழிபாடுகளின் அம்சமாக இறைவார்த்தையையும், வேதாகம விளக்கங்களையும், இம்மாநாடு சார்ந்த ஏனைய அறிவுரைகளையும் ஆர்வமுடன் வாசித்தும் விளக்கியும் வருதல் விசுவாசிகள் அனைவரது கடமையாகும் என்பதை நினைவூட்ட விரும்புகிறோம். ''புதுப்புனல்'' எனப்படும் விழிப்புணர்ச்சி வாரத்தின் நிகழ்வுகளில் பங்குபற்றிப் பயனடைவதற்குப் பங்கு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை முன்வைக்க ஆசிக்கிறோம்.

பல இக்கட்டுக்களின் மத்தியில் நடைபெறவிருக்கும் மேய்ப்புப்பணி மாநாடு எதிர்பார்க்கும் நற்பயனை அளிக்க எல்லா நிலையினரதும் பங்களிப்பு மிக முக்கியமாகும். ஆகவே இதுசம்பந்தமான எல்லா நிகழ்ச்சிகளிலும் ஆர்வமுடன் பங்குபற்றிச் சிந்தித்துச் செயல்பட அனைவரையும் அழைக்கின்றோம். இதற்காக நாம் அனைவரும் இறைவனை வேண்டுவதும், தூய ஆவியின் உந்துதல்களுக்கு இடமளிப்பதும் அவசியமாகிறது. எனவே திருப்பலிவேளையிலும், குடும்ப செப வழிபாடுகளிலும் மாநாட்டுக்கான செபத்தினைப் பயன்படுத்தி அதன் சித்திக்காக இறைவனை வேண்டுவோம்.

### முடிவுரை

எமது முயற்சிகளை இறைவன் சிறப்பாக ஆசீர்வதிக்குமாறு மன்றாடுவோம், ஏனெனில் அவருடைய பணியை விசுவாச பிரமாணிக்கத்துடன் நிறைவு செய்யவே எத்தனிக்கிறோம். ''ஆண்டவன் வீட்டைக் கட்டினாலொழிய அதைக் கட்டுபவர்களின் உழைப்பெல்லாம் வீணே'' (சங். 126:1). இரண்டாயிரமாம் ஆண்டுகளின் பின்வரும் சவால்கள் பாரியவை; பணிகளும் பெரியவை: எனினும் ஆண்டவர் எம்மருகே இருக்கும்வரை நாம் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை (சங்.118:6) என்று நாம் நம்புகிறோம். எமது மாதாவாகிய புனித மரியன்னை கல்வாரியில் இறைவனடியில் நின்றது போல, அப்போஸ்தலருடன் முதல் பெந்தகோஸ்து அன்று இருந்ததுபோல எம்முடனும் பிரசன்னமாயிருந்து எமது முயற்சிகளையும் சீர்மைப்படுத்தியருள மன்றாடுவோம்.

ஆண்டவரில் உங்கள்மேல் பற்றுள்ள
\+ தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.
22–09–1993

குறிப்பு ; இச் சுற்றுமடலை எதிர்வரும் ஒக்டோபர் 3ஆம் நாள் ஞாயிறுவாரம் திருப்பலியின்போது எமது மறை மாவட்டத்தின் எல்லா ஆலயங்களிலும் வாசித்து விளக்குதல் வேண்டும்.

## உங்கள் கவனத்திற்கு

யாழ். மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாட்டிற்கான (D. P. C.) ஆயத்தங்கள் செய்யும் வண்ணம் பின்வரும் பத்துக்குழுக்கள் தற்பொழுது இயங்கி வருகின்றன.

1. வேதாகமம்.
2. நற்செய்தி அறிவிப்பு, கிறிஸ்தவ ஒன்றிப்பு, உரையாடல்.
3. திருவழிபாடு.
4. குருக்கள், துறவியர், குருமாணவர்.
5. பங்குத்திருச்சபை.
6. பொதுநிலையினர், இளைஞர், குடும்பம்.
7. சமூகத்தொடர்பு.
8. நீதி, சமாதானம், மனித முன்னேற்றம்.
9. கல்வி, மறைக் கல்வி.
10. கலை, கலாசாரம்.

மறைவட்டத்தின் சகல பங்குகளிலுமுள்ள கிறிஸ்தவ விசுவாசிகளிடமிருந்து ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெறும் பொருட்டு ஒவ்வொரு மறைக்கோட்டத்திலுமுள்ள பங்குகளில் ''புதுப்புனல்'' எனப்படும் விழிப்புணர்ச்சி வாரம் ஒக்ரோபர் மாதத்தில் பின்வரும் நாட்களில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாணம் மறைக்கோட்டம் —4–8 திகதிகளில்
மானிப்பாய் மறைக்கோட்டம் —11–15 திகதிகளில்
பருத்தித்துறை மறைக்கோட்டம் —18–22 திகதிகளில்
கிளிநொச்சி மறைக்கோட்டம் —25–29 திகதிகளில்

இவ்வாரத்தில் நாளாந்தம் பிற்பகல் 2–30 மணி தொடக்கம் மாலை 7மணிமட்டும் நடைபெறவுள்ள இரு கூட்டங்களில் கருத்துரைகள் வழங்கப்பெற்று வினாக்கொத்துக்கள் மூலம் மக்களின் கருத்துக்கள், ஆலோசனைகள் பெறப்படும்.

எனவே ''புதுப்புனல்'' நடவடிக்கைகள் வெற்றி பெற, சிரமங்கள் பல இருப்பினும், மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பை அன்புடன் வேண்டி நிற்கிறோம்.

## ஞாயிறு வழிபாடு

கீழே தரப்பட்டுள்ள ஞாயிறு தினங்களில் குறிப்பிட்ட விடயங்களை மையமாக வைத்து திருப்பலியில் மறையுரை மன்றாட்டுக்கள் போன்றவற்றை ஒழுங்கு செய்யவும்.

ஒக்டோபர் 10
— குருக்கள், துறவியர் குருமாணவர்.
ஒக்டோபர் 17
— நற்செய்தி அறிவிப்பு, கிறிஸ்தவ ஒன்றிப்பு, உரையாடல்.
ஒக்டோபர் 24
— வேதாகமம்.
ஒக்டோபர் 31
— பொது நிலையினர்.
நவம்பர் 07
— சமூகத் தொடர்பு
நவம்பர் 14
— கலை, கலாசாரம்.
நவம்பர் 21
— நீதி, சமாதானம், மனித முன்னேற்றம்.
1994 ஜனவரி 09
— திருவழிபாடு.
ஜனவரி 16
— கல்வி, மறைக்கல்வி.
ஜனவரி 23
— பங்குத் திருச்சபை.

அருள் தந்தை J. நீக்கிலஸ்
(செயலர்-D.P.C )

# திருத்தலச் சுற்றுலா-3



★ 'யோனா'

## ஆஞ்சலோவின் சிற்பம் (Pieta)

மைக்கல் ஆஞ்சலோ என்ற உலக மகா சிற்பியின் இணையற்ற படைப்பு "பியெட்டா" (Pieta) ரோமை புனித இராயப்பர் பேராலயத்தின் அரிய கருவூலமாக விளங்குகிறது. இதனினும் சிறந்ததோர் சிலையை வேறெந்த சிற்பியும் இனியொருமுறை படைத்தல் அரிது என்ற கருத்தை எதுவித தயக்கமுமின்றி முன் வைக்கலாம்.

இறந்த இயேசுவைத் தன் மடியில் வளர்த்தி சோக உருவாகக் காட்சி தரும் வியாகுலத் தாயின் நீட்டிய கரங்கள் அவளது ஆறாத் துயரத்தை பிரதிபலிக்கும் பாவனையாகக் கையாளப்பட்டிப்பது சிற்பியின் திறமையை விளக்குகிறது. இது அச்சிலையின் ஒரு பெரும் சிறப்பு.

உலகத்துச் சிற்பிகளின் பட்டியலில் அமரத்துவம் பெற்றுவிட்ட மைக்கல் ஆஞ்சலோ தன் படைப்பின் திறனை தானே வியந்து "உள்ளத்தின் சாயல்" என அதை அழைத்தான். வழக்கிலுள்ள கலை மரபுகளை மீறி சில மாற்றங்களை அச்சிலையில் புகுத்தியுள்ளான். அன்னை மரியை வியாகுல மேலீட்டால் களையிழந்து உருவிழந்த கன்னியாகப் படைக்காமல், இயேசுவை விட குறைந்த வயதினளாகத் தோன்றும் அளவுக்கு நிரந்தர அழகின் நிஜ உருவாகப் படைத்துள்ளான். அதற்கு அவன் கூறிய காரணம்: "உடலின் அழகு உயர்ந்த உள்ளத்தின் பிரதிபலிப்பு. கற்புடைய மகளிர் தங்கள் அழகின் புதுமைப் பொலிவை என்றும் இழப்பதில்லை. மற்றையோர் எளிதில் இழந்து விடுகின்றனர்."

சிலையின் மற்றுமோர் சிறப்பு: கன்னித்தாயின் துயரத்தை அது வலியுறுத்தாமல் இறைவனின் திருவுளத்தை மன நிறைவுடன் ஏற்றுக் கொள்ளும் இயல்பை மேலோங்கச் செய்திருப்பதன் மூலம் சிற்பத்தைக் காண்போரின் உள்ளத்தில் "வாழ்க்கை நமக்கு மகிழ்ச்சியூட்டும் போது படைப்புக் கடவுளின் அதே கரங்களால் படைக்கப்பட்ட மரணம் நமக்குத் துன்பமாக இருக்கக் கூடாது" என்ற தத்துவ சிந்தனை தோன்ற வேண்டும் என்பது சிற்பியின் விருப்பம். அதுதான் 'பியெட்டாவின்' பெருமைக்கு முக்கிய காரணம்.

மைக்கல் ஆஞ்சலோவின் ஆற்றலைப் பற்றி 'பிரான்க்டி என்வுட்' என்ற ஆசிரியர் "மோயிசன் கற்பாறையினின்று தண்ணீர் பீறிட்டோடச் செய்ததுபோல், இந்த சிற்பி இறைவனின் மாட்சியைத் தன் சிற்பத்தினின்று (pieta) கண்ணுக்குத் தோன்றும் வண்ணம் கரைபுரண்டோடச் செய்தான்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## மரியன்னை வழியில் பெண்ணின் பெருமை-3

★ என். மீரா

ஊமைகள் பேசும் மொழி, செவிடர்கள் கேட்கும் மொழி அன்பு. அன்புக்குக் கணக்கில்லை, வரவு செலவு கிடையாது. வரியில்லாத பொருள் அன்பு. வளரும் பொருள் அன்பு.

மனித வாழ்வு மறுமலர்ச்சியுறச் சில தேவைகள் வேண்டும். அதில் தலைசிறந்த பொருள் அன்பு. பசுமையும் நீரும் உள்ள இடத்தில் மிருக இனம் பலுகிப் பெருகும். அன்புள்ள இடத்தில் மட்டுமே மனித இனம் செழிக்க முடியும். சமுதாயக் கடலின் ஒரு துளியாகிய தனி மனிதன் சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டுமானால் அவன் அன்புருவினனாக மாறவேண்டும்.

இதயங்களை நெகிழ வைத்து ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த அன்பு என்ற அரும் பொருளுக்குத்தான் வலிமையுண்டு. இவ்வாறான வலிமையுடையவள் பெண் என்றால் அது மிகையாகாது.

இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள அன்புறவைப் பலப்படுத்துங் கருவியாக இருப்பவள் பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளான அன்னை மரியாள்.

அருள் நிறை மரியே வாழ்க! இம் மந்திரத்தின் பொருளை உணர்ந்து நாம் எத்தனை முறை செபித்திருப்போம்? இதில் அகில உலக அன்னையைப் புகழ்கின்றோம். குறையிரந்து மன்றாடுகிறோம். நன்றிக் கீதம் பாடுகின்றோம்.

ஒக்ரோபர் மாதம் செபமாலை மாதம். செபமாலையின் சக்தி பெரிது. ஒரு சொல்லை நாத்தழும்பேறப் பல முறை உச்சரிப்பதினால் அந்தச் சொல்லுக்குப் பன்மடங்கு சக்தி வருகின்றது என்பது ஆன்றோர் கண்ட நெறி..... "செபமாலை தேவையற்றது. பல முறை ஒரே மந்திரத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்வது காலவிரயம்," என்றெல்லாம் பேசப்படுகின்ற இந்தக் காலத்தில் செபமாலை எத்துணை வலிமை வாய்ந்த அருள் பாலிக்கும் சாதனமாக இருக்கின்றது என்பதை உலகுக்கு உணர்த்துவது நம் கடமையாகக் கொள்ள வேண்டும்.

செபமாலையைச் செபிப்போம். ஓயாமல் செபிப்போம். பிள்ளைகளுக்குரிய பாசத்தோடு மரியன்னையை நோக்கி செபிப்போம். அன்புக்கு உணர்ச்சியை உருக்கும் தன்மையுண்டு. எலும்பைக் குழைக்கும் சக்தியுண்டு. உள்ளத்தை ஒட்ட வைக்கும் பசைத் தன்மையுண்டு.

இந்தச் சக்தியும் பண்பும் எங்கள் இதயவலிமையை வளர்த்து, எல்லையற்ற சக்தியை அளித்து எங்களை உய்விக்கும். எங்கள் வாழ்வு மலரும்; வளம் பெற்றுச் சிறக்கும்; எல்லையற்ற இறையன்பில் மூழ்கித் திளைக்கச் செய்யும்.

## 1994-தேசிய மேய்ப்புப்பணி மாநாட்டின் சித்திக்காக செபம்

அனைத்தையும் படைத்துக் காத்துவரும் எங்கள் விண்ணகத் தந்தையே! உமது அளவில்லா நன்மைத் தனத்திற்காக உம்மைப் போற்றிப் புகழ்கின்றோம்.

பாவத்திலிருந்து மனுக்குலத்தை மீட்க உம் திருமகன் கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினீர். நாமும் மனம் திரும்பி கிறிஸ்துவில் புது வாழ்வு வாழ இக்காலத்தில் எம்மை அழைக்கின்றீர்.

அன்புள்ள தந்தையே! புதுப்பித்தல் மாநாட்டிற்கு ஆயத்தம் செய்யும் நாம் எம்மை எதிர்கொள்ளும் பணியின் பொறுப்பை உணர்ந்தவர்களாய் செயல்பட, உமது தூய ஆவியின் ஒளியால் எங்களை நிரப்பியருளும்.

புது யுகத்தை அண்மித்துவரும் நாம் எம் கிறிஸ்தவ வாழ்வைப் புதுப்பித்து பிறரோடு பகிர்ந்து வாழச் செய்தருளும். ஆதிக் கிறிஸ்தவர்களின் முன்மாதிரிகையைப் பின்பற்றி, அன்புச் சமூகமாக திருச்சபையைக் கட்டி எழுப்ப, உமது ஆவியால் எம்மை வழிநடத்தியருள வேண்டுமென எங்கள் ஆண்டவராகிய அதே இயேசுக்கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம்.

இறைவனின் அன்னையே, எங்கள் தாய் மரியே, நற்செய்தி அறிவிப்பின் தாரகையே! எங்களுக்காகப் பரிந்துபேசியருளும். ஆமென்.

## புனித சின்னத்தெரேசம்மாள்

### திருநாள் ஒக்டோபர் 1

ஒக்ரோபர் 1 ஆம் திகதி புனித குழந்தை இயேசுவின் சின்னத் தெரேசாள் விழாவைக் கொண்டாடி மகிழ்வோம். மிகச் சிறிய வயதில் மிகப் பெரிய சாதனைகளைச் செய்து பெரும் பேறடைந்தவள் அவள். புனித சவேரியார் 45 ஆண்டுகள் சாதித்ததைவிட மிகுதியான சாதனைகளை அவரின் அரைப்பங்கு வயதிலேயே சாதித்துக் காட்டியவள் புனித தெரேசாள்.

சின்ன மலர் என்றும் அழைக்கப்படும் இப் புனிதையின் ஆன்மீக வாழ்வின் வெற்றிக்குக் காரணம், அவளிடம் இயற்கையாக அமைந்திருந்த ஆழ்ந்த இறையன்பு. அவள் இதயம் இறைவனின் அன்புக்கு அடிமைப்பட்டு இறையருளால் நிரம்பிக் கிடந்தது. அதனால் அவள் அதிகாரத்தால் சாதிக்க முடியாததை அன்பால் சாதித்து வந்தாள்.

அன்பில் வாழ்பவன் இறைவனில் வாழ்கிறான். இறைவன் அவனுள் வாழ்கிறான் என்பதற்குப் புனித தெரேசாள் வாழ்க்கை ஒரு தெய்வீகச் சான்றாகும்.

## மேய்ப்புப்பணி மாநாட்டின் கல்வி / மறைக்கல்விக் குழு

### 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் கிறீஸ்தவக் கல்வி பற்றிய ஏட்டின் சுருக்கக் குறிப்புகள்

(தொகுப்பு: ஆசிரியர் M. யேசுதாசன்)

**கல்வியில் திருச்சபையின் பொறுப்பு**

1. மீட்பின் மறைபொருளை எல்லா மக்களுக்கும் அறிவிக்கவும், அனைத்தையும் கிறீஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கவும் இறைவனிடமிருந்து திருச்சபை ஆணை பெற்றுள்ளது.
2. இக் கட்டளையை நிறைவேற்ற மனித வாழ்க்கை முழுவதும் கவனம் செலுத்த வேண்டும்.
3. எனவே கல்வி வளர்ச்சியிலும் விரிவாக்கத்திலும் திருச்சபைக்கும் தனிப்பட்ட தொரு பொறுப்பு உண்டு.

**கல்வி பெற அனைவருக்கும் உரிமை உண்டு.**

எல்லா மனிதரும் மனித ஆளுமையின் மாண்புக்குரியவர்கள். இதனால் கல்வி பெற அனைவருக்கும் விட்டுக் கொடுக்க முடியாத உரிமை உண்டு.

கல்வி கொண்டிருக்க வேண்டிய இயல்புகள்.

— மனித வாழ்வின் இலக்கிற்கும் பொருத்தமானதாக இருத்தல்.
— மக்கள் தங்கள் பண்பிற்கும் பால்வேறு பாட்டிற்கும் நாட்டின் பண்பாட்டிற்கும் மரபுகளுக்கும் ஒத்ததாக அமைதல்.
— உலகில் உண்மையான ஒற்றுமையையும் அமைதியையும் வளர்க்கும் வண்ணம் சகோதர உறவு கொள்ள வழி வகுப்பதாக இருத்தல்.

கல்வியின் நோக்கு

1. மனிதனின் இறுதிக் குறிக்கோளைக் கண்முன் கொண்டு உருவாக்கப்படல்.
2. அவன் வாழும் — பொறுப்பை ஏற்க இருக்கும் — சமூகங்களின் நலனைக் கண்முன் கொண்டு கல்வி அவனை உருவாக்க வேண்டும்.
3. உடல் ஒழுக்க அறிவுப் பண்புகளைப் பொருத்தமான முறையில் வளர்க்க உதவ வேண்டும்.
4, தம் வாழ்வை மேம்படுத்த — சுதந்திரத்தை நாட — முதிர்ந்த பொறுப்புணர்வை பெறக் கல்வி துணைபுரிய வேண்டும்.
5, ஆக்க பூர்வமாகவும், கவனத்தோடும் அளிக்கப்படும் பாலியல் கல்வியினை வயதில் வளர வளர பெற உதவுதல்.

**கல்வி அளிக்கும் பொறுப்புடையவர்கள்**

பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு உயிர் அளித்திருக்கிறார்கள் என்பதால் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டியது அவர்களது தலையாய கடமை ...அவர்களே குழந்தைகளின் முதன்மையான முக்கியமான ஆசிரியர்கள் — குடும்பந்தான் சமூக நற்பண்புகளின் முதற் பள்ளி.

**பெற்றோரின் கடமைகள்**

1. முடிந்த போதும், முடிந்த இடங்களிலும் தங்கள் பிள்ளைகளைக் கத்தோலிக்க கல்விக் கூடங்களுக்கு அனுப்புவது.
2· தங்களால் இயன்ற அளவிற்கு அவற்றை ஆதரிப்பதும்.
3. அவற்றோடு தங்கள் பிள்ளைகளின் நலனுக்காக ஒத்துழைப்பது.
4- அறிவுலகில் திருச்சபையின் நலம் பயக்கும் பிரசன்னம் தொடர்ந்து நிலவ/ வளர உதவுதல்.

**கல்வி வழங்குவோர் அழைப்பும் / முக்கியமும்**

பெற்றோர் தம் கடமைகளை நிறைவேற்றுவதில் உதவுதலை மனித சமூகத்தின் சார்பில் பள்ளிகளில் பயிற்றுவோர் பெறும் அழைத்தல் அழகு வாய்ந்தது ; அருமையானது; மிகவும் இனிமையானது.

**அழைப்புப் பெற்றவர்களிடம் இருக்க வேண்டியது.**

— செயற்படுத்த வேண்டிய அறிவுத் திறன் இதய வளம் — தகுந்த பயிற்சி
— புத்துணர்ச்சி பெற — தழுவியமைக்க எப்பொழுதும் தயாராக இருக்கும் மனப்பான்மை.
— உலகியல் அறிவு மறையறிவு ஆகிய இரண்டிலும் பாண்டித்தியம் பெறல்.
— போதனைக் கலையில் தேர்ச்சி
— சான்று வாழ்க்கை
— ஆசிரியர் பெற்றோர் ஒத்துழைப்பு.

ஆசிரியர்களின் பணி ஓர் உண்மையான மறைத்தூதுப் பணி (அப்போஸ்தலிக்க) என்றும், தற்காலத்திற்கு மிகவும் உகந்தது, தேவையானது என்றும் சமுதாயத்திற்குச் செய்யப்படும் ஓர் உண்மையான சேவை என்றும் திருச்சங்கம் அறிக்கையிடுகிறது.

**கல்விக் கூடத்தின் முக்கியத்துவம்.**

1. கல்விப் பயிற்சிக்கான எல்லா வழி வகைகளிலும் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தது கல்விக் கூடமேயாகும்.
2. சரியாக மதிப்பீடுசெய்யும் ஆற்றலை வளர்க்கிறது.
3. பண்பாட்டு, மரபுக் கருவூலத்துள் இட்டுச் செல்கிறது.
4. மதிப்பீடுகளை உணரும் திறத்தை வளர்க்கிறது.
4. ...தொழிலுக்குத் தயார் செய்கிறது.
6. நட்புறவை — புரிந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்க்கிறது.

# மேய்ப்புப் பணிக்கான மாநாடு

## திருவழிபாடு — கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமும்

★ சந்திரன்.

இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னைய உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் திருவழிபாட்டில் பங்குபற்றியவர்கள் அதற்கும் இன்றைய திருவழிபாட்டிற்குமிடையில் பல வேறுபாடுகளை அடையாளங்காணுவர். மொழியில், உடையில், அடையாளங்களில், அமைப்பு முறைகளில் என்று சொல்லி மிகுந்த மாற்றங்கள் மிகக் குறுகிய காலத்திலேயே ஏற்பட்டுள்ளன. இவையாவும் 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் விளைவே. உண்மையில் சங்கம் ஏற்படுத்திய புதுப்பித்தல் அலையை ஏனைய துறைகளை விட மிகத் துரிதமாக உள்வாங்கிக் கொண்டது திருவழிபாடே என்று சொன்னால் அது மிகையாகாது. ஆயினும் வழிபாட்டில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் சங்கத்தின் புதுப்பித்தல் மையத்தைத் தொடுவதாக அமைந்தனவா என்றும் வினாவெழுப்பினால் விடை அவ்வளவு தூரம் மகிழ்ச்சியானதாக அமையப்போவதில்லை.

**சங்கத்தின் முன் ......**

சங்கத்தின் முன்னைய கால கட்டங்களில் திருவழிபாடானது படிப்படியாக சடங்குமையப்பட்டதாக மாற்றங் கண்டது. வெளியாடம்பரங்கள், அடையாளங்கள், செய்கைகள் என்பவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. அதனால் மக்களின் தனிப்பட்ட ஆன்மீக அனுபவத்திற்கோ, அல்லது அவர்களுடைய நாளாந்த வாழ்விற்கோ திருவழிபாட்டில் இடம் இருக்கவில்லை. இதனால் மக்களுடைய வாழ்வும் வழிபாடும் பிரிவுண்டு போக அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட ஆன்மீக அனுபவத்திற்கு பாலைவனங்களையும், பக்தி முயற்சிகளையும், வெவ்வேறு ஆன்மீகப் பயிற்சிகளையும் நாட வேண்டியேற்பட்டது.

**சங்கத்தின் பார்வையில் ......**

இந்நிலையில் சங்கம் மக்களுடைய வாழ்வு, ஆன்மீகம் ஆகியவற்றை திருவழிபாட்டோடு இணைக்கவல்ல அடிப்படைப் போதனைகளை மேற்கொண்டது. கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமும் திருவழிபாடே என்று சங்கீதத்தின் திருவழிபாடு பற்றிய மறைக்கொள்கைத் திரட்டு அறிக்கையிட்டது இந்நிலையில் சங்கத்தின் பார்வையில் சங்கீதத்தின் பார்வையில் மேற்கொள்ளப்படும் திருவழிபாட்டுப் புதுப்பித்தல் அதே வேளையில் ஆன்மீகப் புதுப்பித்தலாகவும், வாழ்வின் புதுப்பித்தலாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

**சங்கத்தின் பின்பு ......**

சங்கத்தின் பின்பு வேகமாக திருவழியாட்டில் மாற்றங்கள் செய்யப்பட்டன. மொழி சுதேசமாக்கப்பட்டது. பண்பாட்டு அடையாளங்களும் மாற்றப்பட்டன. திருவழிபாட்டு ஆண்டு சீர்திருத்தப்பட்டது, சடங்கு முறைகளில் மாற்றங் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் புதுமையானதாக இருந்தன. ஆனால் வத்திக்கான் சங்க மனநிலையில் புதுப்பித்தலை மேற்கொள்பவையாக இருக்கவில்லை. உரோமைய சடங்கு முறைக்குப் பதில் ஒரு சுதேச சடங்கு முறையை உருவாக்குவதாக அமைந்தனவேயன்றி மக்களின் ஆன்மீகத்தையும் வாழ்க்கையையும் புதுப்பிப்பவையாக அமையவில்லை. இந்நிலையில் மாற்றங்களின் புதுமைந்தன்மை மறைந்து போக மக்கள் தங்களுடைய ஆன்மீகத் தேடலை தொடரவும் வாழ்விற்கு அடையாளங் கண்டு பிடிக்கவும் அருங்கொடை இயக்கம், கீழைத்தேய ஆன்மீகப் பயிற்சிகள், அடிப்படைவாதக் குழுக்களின் செப வழிபாடுகள் என்று சொல்லி கத்தோலிக்க திருவழிபாட்டிற்கு புறம்பே செல்கிறார்கள்.

**மீண்டும் மையத்தைத் தேடி ..**

இந்நிலையில் நாம் மீண்டும் திருவழிபாட்டிற்கான புதுப்பித்தல் மையத்தைத் தேடிக் கண்டடைய வேண்டியவர்களாக இருக்கின்றோம். உண்மையில் வாழ்க்கை வழிபாடே கிறிஸ்தவ திருவழிபாட்டின் மையமாகும். கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற பாஸ்கா நிகழ்வுகள் இன்று உலகில் வாழப்பட வேண்டும். கிறிஸ்துவின் ஒவ்வொரு சீடனும் தனது நாளாந்த வாழ்க்கைச் சூழலில் மற்றவர்களுக்காகப் பலியாகும் வழிபாட்டைச் செலுத்த வேண்டும். இவ்வாறு வாழ்விலே நிகழும் கிறிஸ்தவ வழிபாட்டை கிறிஸ்து மூலமாக தந்தையிடம் எடுத்துச் செல்லும் அருட்சாதன கொண்டாட்டமே திருவழிபாடாகும்.

வரலாற்றிலே எங்கோ எமது திருவழிபாடு தொலைத்து விட்ட இந்த வாழ்க்கை மையத்தைக் மீளக்கண்டு பிடித்தாலொழிய உண்மைப் புதுப்பித்தல் நிகழ முடியாது. ஆகவே புதுப்பித்தல் என்று சொல்லி இருப்பதிலும் எழும்புவதிலும், குனிவதிலும், நிமிர்வதிலும் அக்கறை செலுத்துவதை விட்டு மையத்தைத் தேடிப் பயணம் போவோமா?

## 60ஆம் நாள் நினைவு



**கபிரியேல்பிள்ளை**
**ஜோதிகாவலன்**

வீரப்பிறப்பு 14-01-1972 | விண்நினைவுகள் 22-09-1993

வீரச்சாவு 25-07-1993

''இருள் சூழ்ந்த பள்ளத்தாக்குகளில் நடக்க நேர்ந்தாலும் அஞ்சேன்; ஏனெனில் நீர் என்னோடு இருக்கிறீர்''

பாசமுள்ள

அத்தான், அக்கா, அண்ணா, அன்ரிமார், மாமா, மாமி, சித்தப்பா, மருமக்கள், உற்றார், உறவினர்.

A/31/93

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 7 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| சுடர்: 19 | எம் வாழ்வின் வழி யேசு |

## அம்மா

**9. போர்க்காலம் :**

**(4) அடக்குமுறையால் சத்தியம் அழியுமா?**

பாத்திமா பகுதியின் நிர்வாகி கடவுளை வெறுத்தவன். ''அம்மா'' வின் காட்சி பற்றி அறிந்து ஆத்திரம் கொண்டான். அங்கு சிறுவர் செல்வதையும் காட்சியையும் நிறுத்திவிடப் போவதாக சூழ் உரைத்தான்.

அன்னையின் கண்மணிகள் மூவரையும், அவர்கள் பெற்றோரையும் தன்னைச் சந்திக்க கட்டளையிட்டான். லூசியாவும் தந்தையும் அவனைச் சந்தித்தனர். லூசியாவிடமிருந்து உண்மையைத் தவிர வேறு எதையும் அதிகாரியால் அறியமுடியவில்லை. கடும் சினத்துடன் லூசியாவை வெளியேற இசைவு கொடுத்தான்.

பங்குத்தந்தையிடம் கூட்டிச் செல்வதாகப் பாசாங்கு செய்து கண்மணிகளை மாநில ஆட்சித் தலைவனிடம் அழைத்துச் சென்றான் அந்த ஆணவம் நிறைந்த அதிகாரி. ஆட்சித் தலைவனின் அதிகாரமும், அடக்குமுறையும் கண்மணிகளை அசைக்கவில்லை. அதனால் ஆத்திரம் கொண்டு அவர்களை சிறையிலடைக்க ஆணையிட்டான்.

கண்மணிகள் மூவரும் சிறையிலிருந்தபோது, யசிந்தா தன் கழுத்திலிருந்த வரவணிக்கத்தை எடுத்து, சிறைக்கைதியின் உதவியுடன் சுவரில் மாட்டி செபமாலை சொன்னாள். அங்கிருந்த கைதிகளும் அவர்களுடன் செபமாலை சொன்னார்கள்.

மறுநாள் மீண்டும் விசாரணை; வாட்டுவோம் வதைப்போம், கொல்வோம் என்ற பயமுறுத்தல்கள். அவர்கள் அஞ்சவில்லை; பிறகு தனி அறையில் அடைத்தனர். ஆகஸ்ட் 15இல் கண்மணிகள் விடுதலை பெற்றனர்.

அம்மாவைக் காணவேண்டியநாள் கடந்துவிட்டாலும் மன உறுதியுடன் ஆகஸ்ட் 19இல் காண விரைந்தனர். சந்திக்கும் இடம் வந்தது. பேரொளி பிறந்தது. ஒளி வெள்ளத்தில் ''அம்மா'' காட்சி தந்தாள். கண்மணிகள் மகிழ்ச்சியில் பூரித்தனர். செபமாலைத் தியாகம் மீண்டும் வேண்டி நின்றாள் அன்னை. ஒக்டோபர் சந்திப்பில் அற்புதம் புரிவதாக வாக்களித்தாள். செப்ரெம்பர் 13 இல் 25000 மக்கள் அன்னையைக் காண ஆவலாய் நின்றனர். போரிலிருந்து மகன் வரவேண்டும், நோய் தீரவேண்டும், சுமைகள் தீர பலரும் பலவாறு வேண்டிடக் காத்து நின்றனர்.

''அம்மா'' அழகிய கோலத்தில் காட்சிதந்தாள். லூசியா மனமுருகி அன்புத்தாயிடம் தன் உளவேதனையை எடுத்துரைத்தாள். அற்புதம் வேண்டி நின்றாள். ஒக்டோபரில் அற்புதம் புரிவதாகக் கூறினாள்.

அவ்வேளை திடீரென வெள்ளை நிற இதழ்கள் வட்ட வடிவமாக மின்னிக்கொண்டு ஒளி வெள்ளத்தினூடாக விண்ணின்று மண்நோக்கி வந்தன. அவற்றை அங்குள்ளோர் பிடிக்க முன்னர் அடையாளமே இல்லாமல் அவை மறைந்தன. அடுத்து ஓர் ஒளி உருண்டையானது விண்ணின் கீழ்த்திசையிலிருந்து மேற்கு நோக்கி நகர்ந்து சென்றது.

**அன்புக் கண்மணிகாள்!**

''அம்மா''வைப்படித்தும், பார்த்தும், உணர்ந்தும் இருக்கும் நீங்கள் நிட்சயம் நாள்தோறும் நீதியுடன் கூடிய தீர்வுக்காக செபமாலை சொல்வீர்கள். உங்கள் வேண்டுதல் விரைவில் நிறைவேறும்.

காவலன் கண்மணிகாள் **''காவலன் களஞ்சியப்''** **போட்டிக்கு ஆயத்தமாகுங்கள்.**

**உங்கள் அன்பின், அன்புவிழி**

## எங்கள் பிரதேசத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

**2. மொழி**

'' அரசியல் சாசனத்தின் 13 வது திருத்தத்தின் மூலம் மொழிப் பிரச்சனை தீர்த்து வைக்கப்பட்டது. எனவே தொடர்ந்து தமிழர் முணுமுணுப்பதற்குஒன்றுமில்லை!''

பதில்: சிங்கள மொழியுடன் தமிழ்மொழிக்கு உண்மையான சம உரிமை வழங்கியதையிட்டு 13 வது திருத்தம் மயக்கதயக்கநிலையில் (shilly-shallies) இருக்கிறது. மேலும் இத்திருத்தம் எவ்வளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றதென்பதும் கவலைக்குரியது!

**3. தெற்கில் இனங்களுக் கிடையிலான கூட்டுறவு**

'' தென்னிலங்கையில் சிங்களவரும் தமிழரும் அமைதியுடனும் மகிழ்வுடனும் வாழ்கின்றனர். உ-ம் கெதறறாமகிறிக்கற் மைதானத்தில்! ஏன் வட இலங்கையில் முடியாது?''

பதில்: இலங்கையில் கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் அமைதியுடன் வாழுகிறார்கள் என்றால், பொஸ்னியா அல்லது கிழக்கு தீமோர் இல் இவர்களுக்கிடையில் ஒரு பிரச்சனையும் இல்லை என்று சொல்ல முடியுமா?

**4. இயலாமை**

'' இதையிட்டு எம்மால் ஒன்றும் செய்ய இயலாது. காலம் தான் தீர்க்க வேண்டும் ! ''

பதில்: '' இயலாது '' என்ற சொல்லைப் பயன்படுத்துவது மடமைத்தனம்!

**5. பிரித்தல்**

'' தனிநாட்டுக் கோரிக்கையை விட்டுவிடும்படி தமிழருக்குச் சொல்லவும். எல்லாம் சரியாகும்! ''

பதில்: ஒரு நீதியான தீர்வு வைக்கப்பட்டால் நாட்டைப் பிரிக்கும் கோரிக்கை தானாகவே அற்றுப் போகும்.

**6. நிற்பாட்டு**

'' நாட்டின் எல்லாத் தமிழ் பிரசைகளும் புலிகளிடம் '' நிறுத்துமாறு '' கோரிக்கை விடவேண்டும் ''

பதில்: தமிழர் மட்டில் நீதி நியாயத்துடன் நடப்பதே புலிகளை நிறுத்துவதற்கு ஒரே ஒரு வழி.

**7. இராணுவம்**

'' எல்லாவற்றையும் இராணுவத்திடம் விடுவோம். அவர்கள் புலிகளை நிர்மூலமாக்குவார்கள். நாம் என்றும் இன்பமாய் வாழ்வோம்! ''

பதில்: 1979 யூலை இல் ''புலிகளை நிர்மூலமாக்குக '' எனும் கட்டளை முதன் முதலாக ஜனாதிபதி J.R ஜெயவர்த்தனாவால் பிறப்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பல்வேறு தடவைகளில் திரும்பவும் திரும்பவும் கூறப்பட்டுவருகிறது. வருட முடிவிற்கு முன் இப்போர் முடிவிற்கு வருமென வருடா வருடம் கூறப்பட்டும் வருகிறதுதானே ! ... ஆனால் எங்கள் நல் நாடு இரத்தக் கறையில் அழிகின்றது.

● எங்கள் நாட்டையும் மக்களையும் பாதுகாப்போம்!

# முன்னாள் சோவியத் யூனியனில் திருத்தந்தை

## லிற்றுவேனியா — லாற்றுவியா — எஸ்தோனியா

செப். 4—8 செப். 8—10 செப். 10

திருத்தந்தை போலந்தில் மூட்டிய நெருப்புத்தான் இன்று கிழக்கு ஐரோப்பா முழுவதும் பரவி சோவியத்திலும் சுதந்திர நாடுகள் உருவாக மூல காரணமாக இருந்தது என்பது வெள்ளிடைமலை. அப்படிப்பட்ட ஒருவரை வரவேற்றபோது மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்வார்கள் என்று தான் அனைவரின் எதிர்பார்ப்பும் இருந்தது. ஆனால் லிற்றுவேனியா நாட்டில் (04 - 08 செப்ரெம்பர்) அவர் எங்கு சென்றாலும் அதற்கு எதிர்மாறாகவே நடந்தது. வரவேற்பு நிகழ்ச்சியில் தொடங்கி ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் மக்களின் கண்களில் அடக்க முடியாத கண்ணீரைத்தான் காணமுடிந்தது. குருக்களும் அழுதனர், மக்களும் அழுதனர். அது ஆனந்தக் கண்ணீர். 54 ஆண்டுகளாக மூடி மறைத்த சோகங்களை கழுவ வந்த ஆனந்தக் கண்ணீர் தங்கள் சுதந்திரத்திற்கு வித்திட்ட ஒருவருடன் அந்தச் சுதந்திரத்தைக் கொண்டாடிய போது அடக்கமுடியாது வெளிப்பட்ட மகிழ்ச்சி வெள்ளமே அது.

## மக்களோடு செபமாலை

திருப்பயணத்தின் முதல் நாளாகிய சனிக்கிழமை உள்ளூர் நேரம் இரவு 9.30 மணிக்கு மக்களோடு இணைந்து ஜெபமாலை ஜெபித்தார் திருத்தந்தை. பல காலத்தின் பின் கிடைத்த விடுதலைக்கு அன்னை மரிக்கு நன்றி சொல்வோம் என் ) அழைப்புடன் சிறிய உரையும் வழங்கினார்.

## தியாகிகள் கல்லறைத் தோட்டத்தில்

நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்தவர்களின் கல்லறைகளைத் தரிசித்தார் திருத்தந்தை. 1991 ஜனவரி மாதம் சோவியத் துருப்புக்களினால் கொல்லப்பட்ட 13 பேரின் உடல்கள் இக் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டன. இவர்களின் தியாகத்தைக் கௌரவிப்பதாக திருத்தந்தையின் இக் கல்லறைத் தோட்ட வருகையிருந்தது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரின் அங்கத்தினருக்கு அருகிற் சென்று ஆறுதலும் கூறினார் திருத்தந்தை.

## உரத்த குரலில் செபித்தார்

இங்கு இறைவனை நோக்கி உரத்த குரலில் ஜெபித்தார் அவர் இது கல்லறைத் தோட்டத்தில் வாழ்வின்,மரணத்தின் ஆண்டவரும் சிலுவையில் அறைந்து மரணித்து உயிர்த்தவருமான கிறிஸ்துவிடம் ஜெபித்தார் பாப்பிறை.

ஆண்டவரே இன்றும் பசுமையாய் இருக்கும் இம் மரச் சிலுவைகள் 1991 ஆம் ஆண்டு ஜனவரி 13 ஆம் நாளில் நிகழ்ந்தவை தொடர்பாக நாட்டப்பட்டவை. அமைதி மற்றும் நம்பிக்கையின் திருப்பயணியாக இங்கு வந்துள்ள நான் லிற்றுவேனியாவின் மறைச்சாட்சிகள் மற்றும் அவர்களின் கல்லறைகளின் முன்பாக ஆண்டவரே உம் உயிர்ப்பை அறிவிக்கின்றேன்.

படைவீரர்களின் கல்லறைகள் மீதுள்ள சிலுவைகள் சகோதரத்துவத்திற்கும்நேயத்திற்கும் அழைப்பு விடுக்கின்றன. தன்னலம், மொழி, தேசியக்கொடிகள், மரபுகள் ஆகியவை ஒரு போதும் பகைவர்களாக மாறாது இருக்கட்டும். இக் கல்லறைகள் புதிய மனிதனை உருவாக்கட்டும்.

மனித மாண்பு தனது தொடக்கத்தையும் இறுதியையும் உன்னிலே கொண்டுள்ளது என்பதனை லிற்றுவேனிய மக்கள் உணர்வார்களாக என்று ஜெபித்தார் பாப்பிறை.

## புதுப்பித்தலின் அவசியம்

நீண்டகாலமாக உங்கள் நாட்டினர் மீது புகுத்தப்பட்ட உலகாயதக் கோட்பாடுகள் புகுத்தப்பட முயற்சிகள் நடைபெற்றன. இன்று நீங்கள் பெற்றுள்ள சுதந்திரத்துடன் மனித இதயம் மனித ஆன்மா பற்றிய கிறிஸ்துவின் அருள் வாக்குகளை புதுப்பிக்கப்பட்ட சக்தியுடன் அறிக்கையிடுங்கள். உயிருள்ள கடவுளின் வல்லமை லிற்றுவேனியாவின் வரலாற்றில் குறிப்பாக துன்பங்கள், இறைவாழ்வு, வதைப்போர் முகாங்கள், நாடுகடத்தப்படல் போன்ற வேதனைகள் நேரல்கள் வெளிப்படுத்தப்பட்டது. எனினும் தற்சமயம் வேதனைகளின் காலம் மறைந்து சுதந்திரத்திற்கான பாதையில் நாடு அடியெடுத்து வைத்துள்ளது. இவ்வேளையில் உங்களுக்கு ஆன்மீகப் புதுப்பித்தல் எவ்வளவோ தேவைப்படுகிறது.

ஆண்டவர் உங்கள் அனைவரிலும் புதிய இதயத்தையும் உறுதியான மனத்தையும் படைப்பாராக என்று மறை உரையை முடித்தார் பாப்பிரை.

**பல்கலைக் கழகத்தில்**

## கிறிஸ்துவுக்கு இதயக் கதவுகளைத் திறவுங்கள்

கலாசாரத்தின் மனிதர்களே உங்களுக்கு இறை பேருண்மைக்கான மனித எண்ணங்களின் எல்லைக்கோடுகள் மூடிவிடாதிக்குமாறு பார்த்துக் கொள்வதற்குப் பெரும் பொறுப்பு உள்ளது என்று வலியுறுத்தினார்.

சுற்றுச் சூழற் கேட்டால் அச்சுறுத்தப்பட்டு இலட்சக் கணக்கான மக்கள் துன்புறும் இவ்வுலகில் கிறிஸ்தவ உரையாடலும் பல் சமய உரையாடலும் தேவைப்படுகின்றன. இளைய தலைமுறை மத்தியில் புதிய ஒருமைப்பாட்டுணர்வும் அவசியமாக இருக்கின்றது. பூகோள அமைப்பில் ஐரோப்பாவின் மத்தியில் அமைந்துள்ள இப்பல்கலைக் கழகம் உலக அமைதிக்கான பணியில் மேன்மேலும் ஈடுபட வேண்டும். கண்ணீர் நிறைந்துள்ள உங்கள் கண்களைப் பார்க்கும்போது உள்ள
உருகுகின்றது. உங்களில் ப
காலம் துன்புற்ற சகோத
சகோதரிகளை அழைக்கி
றேன். கிறிஸ்துவுக்கு உங்
இதயக் கதவுகளைத் தி
பதற்குப் பயப்படவேண்டா
மனித இதயத்தை நன்கறி
அவர் மனிதனின் உள்ள
கேள்விகளுக்குப் பதில் கூற
யும் என்ற கூற்றுடன் அ
வரையும் ஆசிர்வதித்து
வுரையை முடித்தார்.

**இரண்டரைலட்சம் இளைஞர்களுடன்**

## இயேசுவில் - வாழ்வின் உண்மையான அர்த்தம்

தன்னலத்தையும், மதப் புறக்கணிப்புகளையும் தூண்டிவிடும் நுகர்வுத்தன்மைகளிலும் தவறான செய்திகளிலும் உண்மையான மகிழ்வைக் காணமுடியாது. நற்செய்தியின் ஒரு சில பக்கங்களை மட்டும் ஏற்று மற்றவற்றைப் புறக்கணிக்கும் வளமற்ற சமயக் குளறுபடிகளின்று உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். போதைப் பொருட்களை விற்பது, பயன்படுத்துவது, செயற்கை இன்பங்களை தேடி அலைவது,இழி பொருள் இலக்கியங்களை வாசித்து மனம்போன வழி பாலினச் செயல்களில் ஈடுபடுவது,வன்முறை,தற்கொலை இனவெறி போன்றனவற்றில் ஒரு ஆழ்ந்த வெற்றிடம் மறைந்து இருக்கின்றது. இயேசுக் கிறிஸ்துவைத் தவிர வாழ்வுக்கு உண்மையான அர்த்தத்தை யாரால் தரமுடியும் என்ற கேள்வியை எழுப்பிய பாப்பிறை ஒவ்வொரு கலாசாரத்திலும் இளைஞர் நம்பிக்கையைக் குறித்து நிற்கின்றனர். இளைஞர் என்ற வார்த்தையே ஒரு குறிப்பிட்ட பொறுப்புணர்வைச் சுட்டிக் காட்டுவதாய் இருக்கின்றது எனச் சொல்லி இன்னும் தொடர்ந்தார்.

லிற்றுவேனியா மற்றும் பால்ரிக் இளைஞர்களே! கடவுளின் வார்த்தையை உங்கள் வாழ்வின் மையத்தில் வையுங்கள். கிறிஸ்துவே மனுவுரு எடுத்த உயிருள்ள இறை வார்த்தை. அன்பு, சகோதரத்துவம், நட்பு, சேவை தொண்டு, மனிதன், பெண், திருமணம், வேலை, உணவு, மகிழ்வு ஆகியவற்றை கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் பார்த்து புரிந்து பேசும்போது அது புதிய அர்த்தத்தை புதிய உந்துதலைக் கொடுக்கும். இளைஞரே! திருச்சபை உரையாடலுக்கும், உருவாக்குதலுக்குமான வாய்ப்
வழங்குகின்றது. திருச்சபை
திருவருட்சாதனங்கள
காணமுடியும். இவை கிற
வால் வழங்கப்பட்ட புது
றைப் பிறப்பிக்கின்றன. ஒட்
வுத் திருவருட்சாதனத் தி
உங்கள் வாழ்வின் வளர்ச்
கான பாதையில் பெ
வளர்ச்சியைக் காணமுடி
என் அன்பு இளைஞர்க
திருச்சபையை நீங்கள் சார்
இருக்கலாம். அதேபோ
சபையும் உங்களைச் சா
இருக்கின்றது. திருச்சபைய
அங்கத்தினராக இருங்கள்.
கள் வாழ்வால் சேவைய
திருச்சபையாக இருங்க
சவால் நிறைந்த இவ்வாழ்
என் அன்பான உற்சாகத்
யும் ஜெபத்தையும் அளிக்கி
றேன். உங்களை மாதாவிட
அர்ப்பணிக்கின்றேன்.
வாறு தன் உரையை மு
தார் திருத்தந்தை.

## லூத்தரன் பேராலயத்தில்

லூத்தரன் பேராலயத்தில் தான் கிறிஸ்தவ ஒன்றிப்பு ஜெபக் கூட்டம் இடம் பெற்றது. கத்தோலிக்க ஆயர், லூத்தரன் கிறிஸ்தவ சபை ஆயர் ஆப்தடாக் ஆயர், பப்திக் கிறிஸ்தவ சபை ஆயர் என பல்வேறு கிறிஸ்தவ சபையின் பிரதிநிதிகள் பங்கு கொண்ட கிறிஸ்தவ சபையின் இக்கூட்டத்தில் திருத்தந்தை உரையாற்றினார்.

## திருச்சபையின் சமூகக் கோட்பாடு

திருச்சபையின் சமூகக் கோட்பாடு அரசியல் அல்லது பொருளாதாரக் கோட்பாடு அல்ல. முதலாளித்துவத்திற்கு துணைபோவதுமல்ல முதலாளித்துவத்திற்கும் கம்னியூசத்திற்கும் இடையிலான மூன்றாம் வழியுமல்ல. ஒரு விதப் புதுமையாக நோக்கப்படும் சோவியத் அமைப்பின் வீழ்ச்சியில் கடவுளின் கருத்தைக் காணாமல் இருப்பது மிகவும் கடினம். கம்னியூசத்தின் தோல்வி வரலாற்றுக்குப் பின் முதலாளித்துவத்தின் மதிப்புப் பற்றி கடுமையான சந்தேகங்களை நான் எழுப்ப விரும்பவில்லை. தொழில் வளர்ச்சியடைந்த சமூகத்தின் வழக்கத்திலிருந்து மனிதாபிமானமற்ற நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது. இம் முதலாளித்துவ அடக்குமுறைக்கெதிரான மாக்சியத்தின் போராட்டத்தில் உண்மையின் மையம் இருந்தாலும் இப் போராட்டம் தோல்வி அடைந்துள்ளது. காரணம் இது மனிதனின் மத நம்பிக்கையை மறுதலித்தது. ஒரு மனிதனின் மத உணர்வு புறக்கணிக்கப்படும் போது அவனில் மாண்பு மதிக்கப்பட்டாலும் கூட அது திடமான உத்தரவாதத்தை இழக்கிறது. ஒரு குறிப்பிட்ட வகுப்பு அல்லது சமூகத்தின் பெயரில் இது நடத்தப்பட்ட போது தனி மனிதர்கள் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டார்கள். இந்த
நூற்றாண்டு அனுபவி
இந்த மத உணர்வு புறக்க
கப்பட்ட தன்மையை
காலம் மறக்கக் கூடாது.
வே சமூக நியதியின் மை
மனிதன் என்பதை திருச்
போதிக்கின்றது. இக்
கையின் அடிப்படையில்
சபையின் சமூகக் கோட்
சுட்டிக் காட்டும் கூறுகளை
புரிந்து கொள்ளலாம்.இக்க
மையம் பல மதத்தவர் ம
யில் உரையாடலை ஊக்கு
பதற்கான கலாச்சார ஒன்றி
மையமாக மாறவேண்டும்.

ஆயிரக்கணக்கான முர
பாடுகள் காணும் இன்றை
உலகில் மனிதன் தனியா
இல்லை. கடவுள் அவனோ
என்றும் பயணம் செய்கின்றா
என்பதை கிறிஸ்தவர்க
வழங்க விரும்புகின்றார்க
என்று கல்வி மற்றும் கல
சாரத் துறையினருக்கு கொடு
கப்பட்ட பிரதிகளில் திரு
தந்தை தெரிவித்தார்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 24 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது இல. B/Q 1001/58/81